بسم الله الرحمن الرحيم

# இஸ்லாமிய சிந்தனை

ISLAMIC THOUGHT

RESEARCH JOURNAL OF JAMIAH NALEEMIAH

மலர்: 43 இதழ்: 03 (163) செப்டம்பர் - டிசம்பர் 2025 ISSN : 1391-393X

**பிரதம ஆசிரியர்**

உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத்

**ஆசிரியர் குழு**

அஷ்ஷெய்க் கலாநிதி எம்.ஜே.எம். அரபாத் கரீம் (நளீமி), PhD (IIUM)

அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம். ஹஸ்ஸான் (நளீமி) MCPS (CBO)

அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். பிர்னாஸ் (நளீமி) M.A. (Sudan)

**வெளியீட்டு ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஸீ. ஐயூப் அலி (நளீமி) M.A. (Sudan)

அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் (நளீமி) M.Phil (PDN)

அஷ்ஷெய்க் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம்.எம். மஸாஹிர் (நளீமி) PhD (UM)

அஷ்ஷெய்க் கலாநிதி எச்.எல்.எம். ஹாரிஸ் (நளீமி) PhD (IIUM)

அஷ்ஷெய்க் கலாநிதி ஏ.பீ.எம். அப்பாஸ் (நளீமி) PhD (IIUM)

அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி) M.A. (Pak)

தொடர்புகளுக்கு:

The Manager,
Naleemiah Bureau of Islamic Publications,
Academy for Development, Research and Training (ADRT),
P.O. Box 01, Beruwala (12070).
Email: islamicthought@naleemiah.edu.lk

## பொருளடக்கம்

ஆசிரியர் தலையங்கம் 02
உஸ்தாத் ஏ.ஸீ. அகார் முஹம்மத்

1. அல்குர்ஆனின் பின்புலத்தில் நூஹ் (அலை) அவர்களது சமூகமும் அதன் அழிவுக்கு வழிகோலிய காரணிகளும் -ஒரு தொல்லியல் நோக்கு- 04
அஷ்ஷெய்க் எம். நவாஸ் ஸனூர்தீன் (நளீமி)

2. அருள்மிகு இறைத் தூதர் (ஸல்): சமகால சூழலில் கருணைத் தூதின் பிரயோகம் 15
அஷ்ஷெய்க் கலாநிதி அரபாத் கரீம் (நளீமி)

3. இறைத் தூதர் கட்டியெழுப்பிய தேச நிர்மாணப் பணி: கோட்பாடும் நடைமுறையும் 25
அஷ்ஷெய்க் அஷ்கர் அரூஸ் (நளீமி)

4. ஃபிக்ஹுல் மஆலாத்துடன் தொடர்புடைய சட்ட விதிகள்: உஸூல் நோக்கிலான ஓர் ஆய்வு 38
அஷ்ஷெய்க் கலாநிதி ஏ.பீ.எம். அப்பாஸ் (நளீமி)

5. பேராசிரியர் கைருத்தீன் ஜுனைதின் 'Shapers of Islam in Southeast Asia' 49
அஷ்ஷெய்க் கலாநிதி ஸகி பவ்ஸ் (நளீமி)

இந்த ஆய்வு சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

CamScanner

# பேராசிரியர் கைருத்தீன் ஜுனைதின் 'Shapers of Islam in Southeast Asia'

## -ஓர் அறிமுக நோக்கு-

**அஷ்ஷெய்க் கலாநிதி ஸகி பவ்ஸ் (நளீமி)**

சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம் - மலேசியா
zackyfouz@iium.edu.my

*நவீன இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனையின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் சமகால நோக்கு குறித்த நூற்றுக் கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளன. அவை அச்சிந்தனைப் பாரம்பரியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய சிந்தனையாளர்கள், அவர்களது சிந்தனைகளது பரிமாணங்கள், விவாதங்கள் குறித்த ஆழமான ஆய்வுகளை விமர்சனபூர்மாக அணுகியுள்ளன. ஆனால், குறித்த உரையாடல் பரப்பில் அதிகம் முக்கியத்துவம் அளிக்கப்படாத ஒரு பகுதியாக தென்கிழக்காசிய சூழலில் இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனையின் போக்குகளைக் குறிப்பிட முடியும். நவீன இஸ்லாமிய சிந்தனைப் பரப்பு தொடர்பாக இடம்பெற்றுள்ள ஆய்வு ஆக்கங்களை மதிப்பீடு செய்யும்போது, குறிப்பிட்டுச் சொல்லத் தக்க ஆய்வு இடைவெளியாகவும் இதனை அடையாளப்படுத்த முடியும். ஏனெனில், முஸ்லிம் உலகில் அதிக முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட பிராந்தியமாக தென்கிழக்காசியாவே காணப்படுகிறது. கிட்டதட்ட 300 மில்லியனுக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர். மேலும், உலக முஸ்லிம் சனத்தொகையில் 14 வீதமானோர் தென்கிழக்காசியாவைச் சேர்ந்தவர்கள். இந்தப் பின்புலத்தில், ஏன் இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனை தொடர்பான உரையாடல்களில் தென்கிழக்காசிய சிந்தனையாளர்களது பங்களிப்புகள் அதிகம் உள்வாங்கப்படாமைக்கு பல்வேறு காரணங்களை ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர் (அல்-ஜுனைத், 2022, ப. 1-3).*

*அவற்றில் குறிப்பாக, நவீன இஸ்லாமிய சிந்தனைப் பாரம்பரியத்தை ஆய்வு செய்வதில் அரபுமையவாதம்* (Arab-biasedness) *செல்வாக்கு செலுத்தியதன் தவிர்க்க முடியாத பின்விளைவுகளில் ஒன்றாக தென்கிழக்காசியா புறக்கணிக்கப்பட்டிருப்பதாக சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் (அல்-ஜுனைத், 2022, ப. 1-3). இஸ்லாம் குறித்த புதிய சிந்தனைகளை பிரசவிப்பதிலும் விவாதிப்பதிலும் அரபுலக இஸ்லாமிய சிந்தனையாளர்களே முன்னோடிகளாவர்; அரபுலகுக்கு வெளியிலுள்ள இஸ்லாமிய சிந்தனையாளர்கள் பொதுவாகவே அரபுலக அறிஞர்களது கருத்துக்களை தழுவியே செயற்பட்டிருக்கிறார்கள் என்ற கண்ணோட்டத்தையே இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனையில் அரபுமையவாதம் என்பது குறிக்கின்றது. ஆனால், அண்மைக் காலங்களாக இவ்விமர்சனங்களைத் தாண்டிச் செல்லும் வகையில், தென்கிழக்காசியாவில் இஸ்லாமிய சிந்தனைப் புலம் குறித்த ஆய்வுகளுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும் என்ற அழைப்பு வலியுறுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, சமீபத்தில் தென்கிழக்காசிய பல்கலைக்கழகங்களில் சிறப்பு விரிவுரைகளை நிகழ்த்திய டொரொன்டோ பல்கலைக்கழக பேராசிரியர்*

முஹம்மத் ஃபாதில் ''நவீன இஸ்லாமிய சிந்தனை குறித்த உரையாடல்களில் தென் கிழக்காசியாவை தொடர்ந்தும் இரண்டாம்பட்சமாக கருத முடியாது. அரபுலகை விட மிகவும் ஆழமான மற்றும் உத்வேகமான இஸ்லாமிய சிந்தனை பற்றிய உரையாடல்கள் அங்கு இடம்பெறுகின்றன'' எனக் கூறுகிறார் (ஃபாதில், 2024). அதே போன்று, கொல்கேட் பல்கலைக்கழக விரிவுரையாளர் மெகான் அப்பாஸ் தனது 'Who's Islam: The Western University and Modern Islamic Thought in Indonesia' என்ற நூலில் முஸ்லிம் உலகில் ஏனைய பிராந்தியங்களைப் போலன்றி, தென்கிழக்காசியாவின் இஸ்லாமிய சிந்தனை யாளர்களில் பெரும்பாலானோர் மேற்குலக பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டங் களைப் பெற்றவர்களாவர். எனவே, மேற்குலக ஆய்வு அனுபவங்களையும் கிழக்குல கின் சிந்தனைப் போராட்ட மரபையும் இணைக்கும் புள்ளியாக தென்கிழக்காசியாவின் இஸ்லாமிய சிந்தனை காணப்படுகிறது. ஆகவே, அது பற்றிய ஆய்வுகளை விரிவுபடுத்த வேண்டும் என அழைப்பு விடுக்கிறார் (மெகான் அப்பாஸ், 2021).

இவ்வாறு தென்கிழக்காசிய சூழலில் இஸ்லாமிய சிந்தனையின் போக்குகளை ஆய்வு செய்ய வேண்டும் என்ற கருத்துக்கள் பலமடையும் சூழலிலேயே பேராசிரியர் கைருத்தீன் ஜுனைத் தனது Shapers of Islam in Southeast Asia என்று நூலை வெளியிட்டுள்ளார். அவர் தென்கிழக்காசிய இஸ்லாமிய சிந்தனை மரபு தொடர்பான ஆய்வுப்புல உரையாடல்களில் பிரதான விற்பன்னராக கருதப்படுபவர். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், மலேஷிய சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் ஜோர்ஜ் டவுன் பல்கலைக்கழகம் உள்ளிட்ட கலாசாலைகளில் பேராசிரியராகப் பணியாற்றியவர். தென் கிழக்காசிய சூழலில் இஸ்லாம் பற்றிய விரிவான பல நூல்களை எழுதியவர். இந்தத் தொடரில் கடைசியாக வெளிவந்த நூலே Shapers of Islam in Southeast Asia என்பதாகும்.

இந்நூலின் பிரதான இலக்கு தென்கிழக்காசிய பிராந்தியத்தில் இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனையாளர்களை அறிமுகம் செய்வது மட்டுமன்றி, அவர்களது சிந்தனைச் சட்ட கத்தினுடைய பல்பரிமாணத் தன்மையை கோடிட்டுக் காட்டுவதுமாகும். மேலும், இந்நூலில் அவர் தென்கிழக்காசிய சிந்தனையாளர்களது கருத்துக்களையும் கண்ணோட் டங்களையும் அகன்ற முஸ்லிம் உலகின் சிந்தனையாளர்களது கருத்துக்களுடன் ஒப்பு நோக்கி எழுதியிருப்பது சிறப்பு வாய்ந்ததாகும். குறித்த நூலில், செய்யத் நகீப் அல்-அத்தாஸ், ஒஸ்மான் பாகர், ஹாரூன் நஸூஸான், அஹ்மத் இப்ராஹீம், குன்டோ விஜயோ, ஸகிய்யா தரஜாத் மற்றும் சீசர் அதீப் மஜூர் போன்ற தென்கிழக்காசிய இஸ்லாமிய சிந்தனையாளர்களது கருத்துக்களை நூலாசிரியர் விரிவாக முன்வைத் துள்ளார். தென்கிழக்காசிய சிந்தனையாளர்களை விரிவாக ஆய்வு செய்யும்போது நூலாசிரியர் குறிப்பிட்டுச் சொல்லும் மிக முக்கியமானதோர் அவதானம் யாதெனில், தென்கிழக்காசிய இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனை மரபினுடைய பிரதான பண்பு அது பல்வேறு வித்தியாசமான கருத்தாடல்களைக் கொண்டது என்பதாகும். பொதுவாக மரபுவழிவாதிகள், நவீனத்துவவாதிகள் மற்றும் சீர்திருத்தவாதிகள் என இஸ்லாமிய உலக சிந்தனையாளர்களை பிரித்து நோக்கினாலும் கூட, சீர்திருத்தவாதிகள் (Islamic Reformists) என்ற வகைப்பாட்டுக்குள்ளும் பல்வேறு வித்தியாசமான சிந்தனைப் போக்கு



CS CamScanner

களை கண்டு கொள்ள முடியும். அதற்கான சிறந்த சான்று தென்கிழக்காசிய இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனை மரபை வாசிப்பதாகும் என்கிறார் நூலசிரியர்.

இந்தப் பின்புலத்தில் நூலின் முதல் அத்தியாயத்தில் நகீப் அல்-அத்தாஸின் சிந்தனைகளை நூலாசிரியர் பகுப்பாய்வு செய்துள்ளார். அதில் சமகால முஸ்லிம் உலகில் மதச்சார்பின்மையை அதன் தத்துவப் பின்புலத்தில் நின்று புரிந்து கொள்வதிலும் விமர்சனம் செய்வதிலும் தொடர்ந்து இயங்கிய முன்னணி சிந்தனையாளராக அல்-அத்தாஸை அடையாளப்படுத்த முடியும் என்கிறார். அதுவே அவரது சிந்தனைப் பயணத்தின் அச்சாணி என்றும் கூறுகின்றார். குறிப்பாக, மதச்சார்பின்மையை ஒரு பிரத்தியேக உலக நோக்காக அல்-அத்தாஸ் புரிந்து கொள்ள முயல்கிறார். அவருடைய பார்வையில், மதச்சார்பின்மை என்பது சமூக-அரசியல் வாழ்வு, உறுதியாக விழுமியங்கள் மற்றும் இயற்கை போன்றவற்றை அணுகும்போது அதன் ஆத்மீக அடிப்படைகளைப் புறக்கணிப்பதுடன் அவற்றை வெறுமனே சடரீதியான உள்ளீடுகளை மாத்திரம் கொண்ட தோற்றப்பாடுகளாகக் கருதுவதாகும் என்கிறார். மட்டுமன்றி, மதச்சார்பின்மையின் எழுச்சியின் பிரதான விளைவுகளில் ஒன்று, ஆத்மீகம் எதிர் சட உலகு, நம்பிக்கைகள் எதிர் அறிவு என்ற முரண்பட்ட கண்ணோட்டங்கள் உலகில் துளிர் விட ஆரம்பித்ததாகும். குறிப்பாக, இஸ்லாமிய உலகின் சிந்தனை ஒருமைப்பாட்டை பிளவுபடுத்தியதில் மதச்சார்பின்மை அடிப்படையானது என அவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு, மதச்சார்பின்மையை அதன் தத்துவப் பின்புலத்தில் நின்று புரிந்து கொள்ள முனையும்போது தோன்றும் எதிர்மறை விளைவுகளையும் பேராசிரியர் ஜுனைத் கோடிட்டுக் காட்டுகிறார். அவற்றை அல்-அத்தாஸுடைய எழுத்துக்களிலும் காண முடியும் என்கிறார். சமகால உலகில் மதச்சார்பின்மையை ஒரு குறிப்பிட்ட வகைப்பாட்டுக்குள் புகுத்தி நோக்க முடியாது. உலகில் பல நாடுகளில் மதச்சார்பின்மைக்கும் மதத்திற்கும் இடையிலான உறவு நிலை பல்வேறு வடிவங்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு சூழலிலும் மதச்சார்பின்மை வித்தியாசமான கோணங்களில் புரிந்து கொள்ளப்படுகிறது. இந்த வித்தியாசத்தை அல்-அத்தாஸுடைய மதச்சார்பின்மை தொடர்பான தத்துவக் கண்ணோட்டங்கள் துல்லியமாக உள்வாங்கிக் கொள்ளவில்லை என நூலாசிரியர் கூறுகின்றார். அடுத்தது, மதச்சார்பின்மையை மேற்குலகுடனும் ஆத்மீகப் பெறுமானங்களை இஸ்லாமிய நாகரிகத்துடனும் அல்-அத்தாஸ் இணைத்து நோக்குகின்றார். இதற்கூடாக, மேற்குலக நாகரிகம் எதிர் இஸ்லாமிய நாகரிகம் என்று பிரச்சினைக்குரிய எதிர்மறை இருமையை (Binary) அல்-அத்தாஸ் கட்டமைக்கிறார். இத்தகைய இஸ்லாம் எதிர் மேற்குலக நாகரிகம் என்பது நவீனத்துவ கட்டுமானமாகும். அது வரலாற்று ரீதியான நாகரிகங்களுக்கு இடையிலான பரஸ்பர தாக்கத்தை, உரசல்களை மறுக்கும் கருத்து நிலையாகும். குறித்த நவீனத்துவத்தினுடைய நாகரிகங்கள் பற்றிய பார்வையையே ஹன்டிங்டனுடைய நாகரிகங்களுக்கு இடையிலான மோதல் என்ற விவாதமும் முன்வைக்கிறது. அல்-அத்தாஸும் தனது நூல்களில் தன்னையறியாமல் நாகரிகங்களுக்கு இடையிலான மோதல் என்ற ஹன்டிங்டனின் சட்டகத்தை ஆதரித்து நிற்பதாக பேராசிரியர் அல்-ஜுனைத் மேலும் விமர்சனம் செய்கிறார் (ப. 20-41).

நூலின் இரண்டாம் அத்தியாயத்தில் நூலாசிரியர் மலேஷிய தத்துவவியலாளர் ஒஸ்மான் பாகரின் சிந்தனைச் சட்டகத்தை விரிவாக அலசுகிறார். அதில், ஒஸ்மான் பாகரை ஓர் அறிவாய்வியலாளர் (Epistemologist) என அறிமுகம் செய்யும் அவர், பேராசிரியர் செய்யத் ஹுஸைன் நஸ்ரின் சிந்தனைகளால் அதிகம் ஆகர்ஷிக்கப்பட்டவராக ஒஸ்மான் பாகரை பொதுவாக புரிந்து கொள்ள முடியுமாக இருந்தபோதிலும் கூட நவீன விஞ்ஞானத்தை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் நின்று புரிந்து கொள்ளுதல் என்ற நஸ்ரின் சிந்தனைத் திட்டத்தை விட பரந்த தளத்தில் ஒஸ்மான் பாகர் தொழிற்படுவதாக குறிப்பிடுகிறார். பேராசிரியர் ஜுனைத்தின் நோக்கில், ஒஸ்மான் பாகர் முன்வைக்கும் பிரதான விவாதம் யாதெனில், ''இஸ்லாமிய சமூகத்தின் எழுச்சி என்பது ஒரு அறிவாய்வியல் மறுமலர்ச்சியாகவே (Epistemological Renewal) இருக்க முடியும்'' என்பதாகும். அதாவது, நவீன உலகில் மனித சமூகம் எதிர்கொள்ளும் சகல பிரச்சி னைகளுக்குமான பின்புலம் அறிவாய்வியல் சார்ந்ததாகும். குறிப்பாக, ஐரோப்பிய அறிவொளிகால அறிவாய்வியல் கண்ணோட்டங்களை காலனியம் சர்வதேசத்தன்மை கொண்டதாகக் காட்சிப்படுத்தி, முஸ்லிம் உலகின் மீது திணித்தது. எனவே, அதுவரை இஸ்லாமிய உலகில் நிலவிய பல்வேறு வித்தியாசமான அறிவு மூலங்களை ஒருங்கிணைந்ததோர் உலகக் கண்ணோட்டத்தின் (Integrated world view) அடிப்படை யில் உள்வாங்கிக் கொள்ளும் நிலைமை மாறி, அறிவை அணுகுவதில் குழப்பங்களும் சிக்கல்களும் தோன்றின. குறிப்பாக, உலக அறிவு மற்றும் மார்க்க அறிவு, இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என அறிவைக் கூறுபோடும் அறிவுக் கோட்பாடு சார்ந்த பிரிவினைவாத சிந்தனைகள் (Epistemic Sectarianism) துளிர்விட ஆரம்பித்தன. இதுவே முஸ்லிம் உலகின் வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணமாகும் என ஒஸ்மான் பாகர் குறிப்பிடுகின்றார்.

எனவே, இஸ்லாமிய உலகின் அறிவாய்வியல் எழுச்சி என்பதனை மூன்று பரிமாணங் களைக் கொண்டதாக அவர் அடையாளம் காண்கிறார். முதலாவது, இறைவனை மையப்படுத்திய இஸ்லாமிய அறிவாய்வியல் கண்ணோட்டத்தை மீளவும் கட்டி யெழுப்ப வேண்டும். இரண்டாவது, அந்த அகன்ற தளத்தில் நின்று கொண்டு ஏனைய நாகரிகங்கள் பிரசவித்த அறிவு நோக்குகளுடன் உரையாட வேண்டும். மூன்றாவது, இஸ்லாமியக் கண்ணோக்கின் அடிப்படையில் இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், உலக அறிவு, மார்க்க அறிவு என்ற அறிவைக் கூறுபோடும் வகைப்பாடு களை தாண்டிச் செல்லும் பொது அறிவுக் கோட்பாடொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். இந்த மூன்று தளங்களையும் உள்ளடக்கிய இஸ்லாமிய அறிவுக் கோட்பாட்டை 'தவ்ஹீதிய அறிவாய்வியல் கோட்பாடு' (Tawhidic Epistemology) என ஒஸ்மான் பாகர் அழைக்கிறார். அதனோடிணைந்த வகையில், பேராசிரியர் ஜுனைத், ஒஸ்மான் பாகரின் சிந்தனைச் சட்டகத்தின் மீது ஒரு மிக முக்கியமான விமர்சனமொன்றையும் முன்வைக் கிறார். அதாவது, அறிவொளி கால அறிவுக் கோட்பாட்டை சர்வதேசத் தன்மை கொண்டதாக முன்வைத்தபோதுதான், உலகில் பல பாகங்களிலும் அறிவுக் கோட்பாடு சார்ந்த பிளவுகள் ஏற்பட்டதாக கூறுகின்றார் ஒஸ்மான் பாகர். ஆனால், மறுபுறம்



CamScanner

இஸ்லாமிய அறிவுக் கோட்பாட்டை சர்வதேசத்தன்மை (Universal) கொண்டதாக அவரே முன்வைக்கிறார். அது இறைவனை மையப்படுத்திய அறிவுக் கோட்பாடாக இருப்பதால், ஏனைய சகல அறிவாய்வியல் நோக்குகளையும் விட இஸ்லாமிய அறிவுக் கோட்பாடு சிறந்தது, மேன்மையானது என்றும் வாதிக்கிறார். இங்கு அவர் தன்னை யறியாமல் ஓர் அறிவுக் கோட்பாட்டை ஆதிக்க சக்தியாக முன்வைக்கும் தவறை அவரே மேற்கொள்வதாக பேராசிரியர் ஜுனைத் கோடிட்டுக் காட்டுகிறார் (ப. 41-62).

நூலின் மூன்றாவது அத்தியாயம் தென்கிழக்காசியாவில் மற்றொரு மிக முக்கியமான சிந்தனையாளரான ஹாரூன் நஷூஷனது சிந்தனைப் பங்களிப்புகள் குறித்து பேசுகிறது. அவ்வத்தியாயத்தில் பேராசிரியர் ஜுனைத் தென்கிழக்காசிய சூழலில் இஸ்லாமிய பகுத்தறிவுவாத சிந்தனைப் பள்ளியை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னணி சிந்தனை யாளராக நஷூஷனை அடையாளம் காண்கிறார். குறிப்பாக, முஹம்மத் அப்துஹுவின் இஸ்லாமிய சீர்திருத்தவாத சிந்தனைகளை தனது பிராந்தியத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட சிந்தனைசார் சவால்களை எதிர்கொள்வதற்கு பிரயோகித்தவராகவும் அவரை சுட்டிக்காட்டுகிறார். அதாவது, தென்கிழக்காசியாவில் 'அப்துஹுவாதம்' (Abduhisam) என்ற பிரத்தியேகமானதொரு சிந்தனைப் பள்ளியொன்றையே நஷூஷன் கட்டியெழுப்பியதாகவும் எழுதுகின்றார். நஷூஷன் முன்வைத்த மிக முக்கியமான சிந்தனை யாதெனில், இஸ்லாத்தின் பிரதான மூலாதாரமான அல்-குர்ஆன் பகுத்தறிவை அறிவை ஆழப்படுத்துவதற்கான ஒரு மிக முக்கியமான ஊடகமாக முன்வைக்கிறது என்பதாகும். எனவே, முஸ்லிம் சமூகம் பகுத்தறிவை இஸ்லாத்தின் அல்லது வஹியின் எதிரியாக கட்டமைக்காமல், வஹியின் வழிகாட்டலாகக் கருதி உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். இந்த வகையில், அஷ்அரி சிந்தனைப் பள்ளியினுடைய வஹியை பகுத்தறிவை விட மேலாகக் கருதும் போக்கையும் நஷூஷன் விமர்சனம் செய்கிறார். மாறாக, அஷ்அரீக்களைப் போன்று அல்-குர்ஆனை எல்லா விடயங்களையும் உள்ளடக் கிய மூலாதாரமாகப் (comprehensive source) புரிந்து கொள்ளாமல், பல்வேறு அறிவுத் துறைகளையும் முறையாக அணுகுவதற்கான பண்பாட்டுப் பார்வையைத் தரும் வழி காட்டலாக (constituent source) அணுக வேண்டும் என்பது நஷூஷனுடைய கருத்தாகும். இத்தகைய கருத்துக்கள் இஸ்லாமிய வரலாற்றில் தோற்றம் பெற்ற முஃதஸிலா சிந்தனைப் பள்ளியின் பகுத்தறிவு பற்றிய பார்வைகளால் நஷூஷன் ஆகர்ஷிக்கப்பட்டுள்ளதற்கான தெளிவான சான்றாகும் என்பது நூலாசிரியரது அவதானமாகும். ஆனால், அன்றைய முஃதஸிலாக்கள் போலன்றி, இஸ்லாமிய மூலாதாரங்கள் போதிக்கும் ஆத்மீக உலகக் கண்ணோக்கின் அடிப்படையில் பகுத்தறிவு வழிநடத்தப்பட வேண்டும். மேலும், பகுத்தறிவை வஹியின் பண்பாட்டு வழிகாட்டல்களை விட மேலாகக் கருதும்போது தோற்றம் பெறக்கூடிய பகுத்தறிவின் அடக்குமுறையையும் நஷூஷன் விமர்சனபூர்வ மாக அணுகியுள்ளதாகவும் நூலாசிரியர் மேலும் சொல்கிறார்.

ஆத்மீக நீக்கம் செய்யப்பட்ட பகுத்தறிவுவாதம் மனித சமூகத்தை அழிவை நோக் கியே வழிநடத்திச் செல்லும் என்பதும் நஷூஷனின் புரிதலாகும். இவையனைத்தையும் தொகுத்து நோக்கும் போது, ஹாரூன் நஷூஷனுடைய இஸ்லாமியப் பகுத்தறிவுக்



CamScanner

கண்ணோட்டத்தை 'Methodolo gical Mu'tazilism' என்ற புதியதொரு கோட்பாட்டுச் சட்டகத்தினுடாக புரிந்து கொள்ள முடியும் என பேராசிரியர் ஜுனைத் குறிப்பிடுகிறார். அதாவது, முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் நிலவும் பகுத்தறிவு பற்றிய எதிர்மறை கண்ணோட்டங்களை விமர்சனம் செய்வதுடன், இஸ்லாமிய நோக்கில் பகுத்தறிவின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக முஃதஸிலாக்களதும் ஏனைய பகுத்தறிவுசார் அறிவு மரபுகளதும் கண்ணோட்டங்களை கருவியாக (Instrument) பயன்படுத்திக் கொள்வதையே Methodological Muthazlism என்ற சட்டகம் குறித்து நிற்கிறது. இது முஃதஸிலா சிந்தனைப் பள்ளி முன்வைத்த சகல சிந்தனைகள், கோட்பாடுகள் மற்றும் எதிர்கொண்ட வரலாற்று அனுபவங்கள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக் கொள் வதனைக் குறிக்க மாட்டாது. மாறாக, பகுத்தறிவின் முக்கியத்துவம் பற்றி அவர்கள் முன்வைத்த தெரிவு செய்யப்பட்ட கருத்துக்களை மட்டும் சமூகத்தில் பொது விவாத மொன்றைத் தூண்டி விடுவதற்கான கருவியாகப் பயன்படுத்திக் கொள்வதாகும். இந்தக் கோட்பாட்டின் அடியாகவே முஹம்மத் அப்துஹு மற்றும் ஹாரூன் நஷூஷன் போன்றவர்களது பகுத்தறிவு சார்ந்த கருத்துக்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது பேராசிரியர் ஜுனைதின் கருத்தாகும் (ப. 64-84).

தொடர்ந்து, தென்கிழக்காசிய சூழலில் அறிவை இஸ்லாமியப்படுத்தல் கருத்தாடல் பரபரப்பாக நடைபெற்று வந்த சூழலில் மேற்குலக சட்ட சிந்தனையையும் இஸ்லாமிய சட்ட சிந்தனையையும் ஒருங்கிணைத்து சட்ட நோக்கொன்றைக் கட்டியெழுப்புவதற்காக (Harmonization of Islamic and Western Law) புலமைத்துவ தளத்தில் இயங்கிய பேராசிரியர் அஹ்மத் இப்ராஹீமினுடைய பங்களிப்புக்களை நூலின் நான்காவது அத்தியாயம் ஆராய்கின்றது. மேற்ககுலக சட்ட சிந்தனையும் இஸ்லாமிய சட்ட சிந்தனையும் இரண்டு வித்தியாசமான அறிவுக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமையப் பெற்றிருக்கிறது என்ற உண்மையை பேராசிரியர் இப்ராஹீம் மறுக்கவில்லை. ஆனால், இரண்டு சட்ட சிந்தனையினதும் நன்மைகளை இணைக்கும் வகையில் ஒருங்கிணைந்த சட்டக் கண்ணோட்டமொன்றை வரைந்து கொள்ள முடியும் என அவர் ஆழமாக நம்பியதாகவும் அது தற்போதைய சட்டச் சூழலை எதிர்கொள்வதற்கான யதார்த்தமான தீர்வாகவும் அமையலாம் எனவும் பேராசிரியர் இப்ராஹீம் நம்பியதாக பேராசிரயர் ஜுனைத் குறிப்பிடுகிறார். இந்த இலக்கை அடைந்து கொள்வதில் அவர் முன்னெடுத்த பல்வேறு முயற்சிகளையும் நூலாசிரியர் கோடிட்டுக் காட்டுகிறார். குறிப்பாக, அறிவுத் தளத்தில், இஸ்லாமியச் சட்டப் பாரம்பரியத்தில் தோற்றம் பெற்ற மகாஸிதுஷ் ஷரீஆ மற்றும் மஸ்லஹா கோட்பாடுகள் மற்றும் மத்ஹப்களை ஒப்பீடு செய்து சமகாலத்திற்குப் பொருத்தமான நிலைப்பாடுகளை அவற்றிலிருந்து தெரிவு செய்தல் என்ற இரு அடிப்படைகளின் நிழலில் மேற்குலக சட்ட சிந்தனையுடன் உரை யாடல் செய்வதற்கான முறைமைகளைப் பேசும் பல ஆக்கங்களை அவர் பிரசுரித்தமை பேராசிரியர் இப்ராஹீமுடைய மிக முக்கியமான பங்களிப்பாக நூலாசிரியர் மேலும் விளக்குகின்றார். இரண்டாவது, மலேஷிய பல்கலைக்கழகங்களில் சட்ட பீடங்களில் மேற்கத்தேய சட்ட சிந்தனை மற்றும் இஸ்லாமிய சட்டப் பாரம்பரியம் என்ற இரு



CamScanner

துறைகளிலும் சிறப்புத் தேர்ச்சியை பெற்றுக் கொள்ளும் வகையில், பாடத் திட்டங்களை வடிவமைக்கும் முயற்சியிலும் தீவிரமாக அவர் இயங்கினார். மூன்றாவது, தற்போது நடைமுறையிலுள்ள இஸ்லாமிய சட்டங்களை அமுலாக்கும் பொறிமுறையை மேலும் பலப்படுத்துவதற்கான பல செயற்திட்டங்களையும் அஹ்மத் இப்ராஹீம் மேற்கொண்டதாக பேராசிரியர் ஜுனைத் எழுதுகின்றார். மகாஸிதுஷ் ஷரீஆ கோட்பாட்டுச் சட்டகத்தின் நிழலில் ஷரீஆவைப் புரிந்து கொள்ள முயலும்போதும் மற்றும் அதனை நாட்டின் சட்ட சிந்தனையாக முன்வைக்கும்போதும் முஸ்லிம் அல்லாதவர்களும் ஷரீஆவின் முக்கியத் துவத்தையும் பெறுமதியையும் புரிந்து கொள்வார்கள் என பேராசிரியர் இப்ராஹீம் வலியுறுத்தியதாகச் சொல்லும் நூலாசிரியர், இஸ்லாமிய ஷரீஆ சட்டம் பற்றிய எதிர்மறை கருத்து நிலைகள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சூழலில் அது எவ்வாறு சாத்தியம் என விமசர்னபூர்வமாக கேள்வி எழுப்புகிறார் பேராசிரியர் ஜுனைத் (ப. 86-106).

மிகவும் பரந்த தளத்தில் இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனைக்கு பங்களிப்பு நல்கிய மேற்சொன்ன நான்கு சிந்தனையாளுமைகளுடன் இணைத்து, நூலின் அடுத்த இரு அத்தியாயங்களில் தென்கிழக்காசிய சூழலில் இஸ்லாமிய வரலாற்றுத் தத்துவம் குறித்துப் பேசிய குண்டோ விஜயோ மற்றும் ஸிஸர் அதீப் மஜூல் என்ற இரு பெரும் சிந்தனை யாளர்கள் தொடர்பாக நூலாசிரியர் விவரிக்கின்றார். குறிப்பாக, இந்தோனேஷியாவைச் சேர்ந்த குண்டோ விஜயோ மார்க்ஸிய வரலாற்றுத் தத்துவத்தின் அனுபவத்தில் நின்று இஸ்லாமிய நபித்துவ வரலாற்றுத் தத்துமொன்றை முன்வைத்ததாக பேராசிரியர் ஜுனைத் எழுதுகின்றார். அதாவது, முஸ்லிம் சமூகத்தை இயக்குவிக்கும் ஊக்கியாக நபித்துவ வரலாறுகள் தொழிற்பட வேண்டும். அந்த வரலாற்றுக் கண்ணோட்டத்தை உள்வாங்கிக் கொண்ட நிலையில், ஏனைய மேற்குலக மற்றும் கிழக்குலக வரலாற்று நோக்குகளை கற்க வேண்டும் என குண்டோ விஜயோ வலியுறுத்தியதாகவும் அவர் மேலும் சொல் கிறார். எப்போதும் ஒரு குறிப்பிட்ட காரணி அல்லது இலக்கு வரலாற்றை இயக்குகிறது (Historical Determinism) என்ற கருத்தை மறுக்கும் குண்டோ விஜயோ, வரலாறு பற்றிய பல்வேறுபட்ட தத்துவ நோக்குகளையும் தொகுத்துக் கொண்ட நிலையில் முஸ்லிம் சமூகம் தனக்கான வரலாற்றுத் தத்துவத்தை வரைந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்ததாகவும் கூறுகின்றார் (ப. 106-128). அதனோடிணைந்த வகையில், பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஸிஸர் அதீப் மஜூல் ஒடுக்கப்பட்டவர்களது வரலாறு என்ற காலனிய நீக்க சிந்தனையின் ஒளியில் பிலிப்பைன்ஸின் தேசிய வரலாற்றுச் சட்டகத்தை விமர்சனம் செய்து, அங்கு வாழும் சிறுபான்மை முஸ்லிம்களது பங்களிப்புகளை ஆவணப்படுத்துவதில் பெரும் பங்களிப்பு செய்ததாவும் பேராசிரியர் ஜுனைத் விளக்கு கின்றார்.

நூலின் கடைசி அத்தியாயம், இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஸகிய்யா தரஜாத்தினுடைய இஸ்லாமிய உளவியல் சிந்தனைகள் பற்றி விரிவாகப் பேசுகிறது. அந்த அத்தியாயம், நவீன மேற்கத்தேய உளவியல் சிந்தனையையும் இஸ்லாமிய உளவியல் கண்ணோட் டங்களையும் இணைத்த முழுமைத்துவ உளவியல் கோட்பாட்டுச் சட்டகமொன்றை ஸகிய்யா தரஜாத் பேசியதாக நூலாசிரியர் கோடிட்டுக் காட்டுகிறார். குறிப்பாக, இஸ்லாமிய உளவியல் சிந்தனையில் ஆத்மீக பரிமாணத்தின் முக்கியத்துவத்தை கோட்பாட்டாக்கம்

செய்வதில் ஸகிய்யா தரஜாத்தின் பங்களிப்பு முக்கியமானது என்றும் வாதிக்கின்றார் (ப. 128-178).

இவ்வாறு நூலின் ஏழு அத்தியாயங்களையும் மொத்தமாக தொகுத்து நோக்கும்போது, பேராசிரியர் கைருத்தீன் ஜுனைதின் ‘Shapers of Islam in Southeast Asia’ எனும் நூலை நவீன இஸ்லாமிய சிந்தனை பற்றிய உரையாடலை விரிவுபடுத்தும் மிக முக்கியமான தொரு பங்களிப்பாகச் சொல்ல முடியும். குறிப்பாக, அது தென்கிழக்காசிய சூழலில் நிலவும் இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனைப் போக்குகளுடைய பல்வேறுபட்ட கோணங் களை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது மட்டுமன்றி, சமகால நவீனத்துவ, பின் நவீனத்துவ மற்றும் காலனிய நீக்க சிந்தனையாளர்களுடனும் அகன்ற இஸ்லாமிய உலகின் சிந்தனையாளர்களுடனும் தென்கிழக்காசிய இஸ்லாமிய சீர்திருத்த சிந்தனையாளர்களது கண்ணோட்டங்களை ஒப்பிட்டு உரையாடும் போக்கையும் நூலினுடைய அத்தியாயங் களில் காண முடியும். இதுவே நூலின் மிகப் பெரிய வலிமை என்றும் கூற முடியும். அத்துடன், எல்லா சிந்தனையாளர்களதும் கருத்துக்களில் நிலவும் முரண்பட்ட சிந்தனை களையும் நூலாசிரியர் தெளிவாக அடையாளப்படுத்திக் காட்டுகிறார். மறுபுறம், நூலாய்வு செய்யும் எல்லா சிந்தனையாளர்களையும் ‘சீர்திருத்தவாத சிந்தனை முகாமைச் சேர்ந்தவர்கள்’ என பேராசிரியர் ஜுனைத் அறிமுகம் செய்கிறார். ஆனால், பொதுவாக சீர்திருத்த சிந்தனை முகாம் என்பது இஸ்லாத்திற்கும் நவீனத்துவதற்திற்கும் இடையிலான உடன்பாட்டுப் புள்ளிகளை வலியுறுத்தும் போக்கைக் கொண்ட சிந்தனையாளர்களை அடையாளப்படுத்தவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பின்புலத்தில், நகீப் அல்-அத்தாஸ் மற்றும் ஒஸ்மான் பாகர் போன்றவர்கள் சீர்திருத்த சிந்தனையாளர்கள் என்பதனை விடவும், நவ-மரபுவழிவாத சிந்தனை (Neo-Traditionalism) சட்டகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவர்கள் என்று புரிந்து கொள்ள முடியும். எனவே, சீர்திருத்த சிந்தனை என்ற பிரயோகத்தை ஓரளவு மேலோட்டமாக பேராசிரியர் அல்-ஜுனைத் கையாண்டுள்ளதனை இந்நூல் பற்றிய விமர்சனமாக முன்வைக்க முடியும்.

### உசாத்துணை:

Abbas, M. B. (2021). Whose Islam? The Western University and Modern Islamic Thought in Indonesia. Stanford University Press.

Mohamed Fadel, “Not Peripheral, Southeast Asia Is Emerging Center of Global Islam,” Center for Shared Civilizational Values, August 22, 2024, accessed [today’s date], https://civilizationalvalues.org/media/political-communiques/2024/2024_08_22_Indonesia-as-the-Emerging-Center-of-Global-Islam/2024_08_22_Indonesia-as-the-Emerging-Center-of-Global-Islam.pdf.

Syed Muhammad Khairudin Aljunied, Shapers of Islam in Southeast Asia: Muslim Intellectuals and the Making of Islamic Reformism (Oxford University Press, 2022).



CamScanner